# காஞ்சி



விலை 20 காசு

6-8-67


சென்னை சாந்தி · கிரெளன் · புவனேசுவரி
(டீலக்ஸ் ஏர்கண்டிஷன்ட்)
மற்றும் தென்னுடெங்கும்
இப்பொழுது நடைபெறுகிறது!
பத்மஸ்ரீ சிவாஜி கணேசன் அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
திருவருட் செல்வர்
ஈஸ்ட்மென் கலர்
பாடல்கள் · கவிஞர் கண்ணதாசன் • இசை · K.V. மகாதேவன • ஒளிப்பதிவு · பிரசாத் • கலை · கங்கா
ரிகார்டிங் · ரீரிகார்டிங் · T.S. ரங்கசாமி • ஸ்டுடியோ · சாரதா (வெஸ்லிஸ் ஆப் மெஜஸ்டிக் ஸ்டுடியோ)
ப்ராஸஸிங் · பிரிண்டிங் · ஜெமினி ஸடுடியோஸ கலர் லாபரட்டரி
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A.P. நாகராஜன்

# காஞ்சி

ஆண்டுசந்தா ரூ 10. ஆறுமாதம் ரூ 5.

மலர் 4 6—8—67 இதழ் 2


# கட்டாயக் கருத்தடை?

இந்தியத் துணைக்கண்டத்தின் மக்கள் தொகை விவகாரம் இரு கிழ்மைகளாகச் சூடு பிடித்துக்கொண்டிருக்கிறது.

கடந்த ஏப்ரல் வரையில், இந்நாட்டின் மக்கள் தொகை எண்ணிக்கை 50 கோடியையும் தாண்டி விட்டது என்று கூறப்பட்டிருக்கிறது.

1947-ல் பாகிஸ்தான் பிரிவினை செய்யப்பட்டு, பரிமாற்றங்கள் யாவும் முடிவான பின்னர், இந்திய மக்களின் தொகை சுமார் 33 கோடி அளவுக்கு மட்டுமே இருந்தது.

இந்த எண்ணிக்கை 1967ல் அதாவது 20ஆண்டுகளுக்குப் பிறகு 33 லிருந்து 50 கோடி ஆக உயர்ந்திருக்கிறது. முன்னைவிட இப்போது 17 கோடி உயர்வு; சுமார் 50 சதவிதத்துக்கும் மேலாக இருப்பதாகக் கணக்கிட்டுக் கூறி இருக்கிறார்கள்.

1947 லிருந்து 1967 வரையில் 50 சதவீதம் மக்கள் தொகை கூடி இருக்கிறது என்ற கணக்கை வைத்துக்கொண்டு, கணக்கிட்டுப் பார்த்தால் 1927 லும் 1907லும் இந்த நாட்டின் மக்கள் தொகை எவ்வளவு இருந்திருக்கும் என்பதை கணித நிபுணர்களின் சிந்தனைக்கும் பதிலுக்கும் விட்டுவிடுகிறோம்!

ஆனால் காட்டாற்று வேகத்தில் பெருகி வரும் மக்கள் உயர்வுப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டுதான் தீரவேண்டும். இந்த விவகாரத்தில் மத்திய அரசும் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டுதான் வருகிறது.

மத்திய அரசின் சிந்தனைகள் தீவிரமடைந்திருப்பதற்குக் காரணம், மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக பிரச்சினைகள் புதிய புதிய கோணத்தில் பிறப்பெடுத்துக் கொண்டிருப்பதேயாகும் என்றும் வாதிடப்படக்கூடும்.

மக்கள் பெருகி இருந்தாலும் சரி, அல்லது பெருகி இருப்பதாகக் கூறப்பட்டாலும் சரி, பிரச்னைகள் பெருகி இருக்கின்றன என்பதில் மாற்றுக் கருத்து இருப்பதற்கில்லை.

ஆனால் பெருகி இருக்கின்ற பிரச்னைகளை முன்னிறுத்திக்கொண்டு அவை அனைத்திற்கும் மக்கள் தொகைப் பெருக்கமே காரணம் என்று கூறப்படுவதைத் தான் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பல ஆண்டுக்காலமாகவே மக்கள் பெருக்கத்தைக் குறைக்கவும் தடுக்கவும் பல தரப்பட்ட யோசனைகளும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுக்கொண்டுதான் வருகின்றன.

ஆண், பெண் இருபாலர்க்கும் அறுவைச் சிகிச்சை செய்தல், 'லூப்' வழங்குதல்போன்ற முறைகள் இப்போதும் செயலில் இருந்துகொண்டுதான் வருகிறது. என்றாலும், அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவரது மனைவி குழந்தையைப் பெற்றெடுத்தாள்! என்ற செய்தியினையும், 'லூப்' கருவியுடன் குழந்தையும் பிறந்தது என்ற செய்தியினையும் இதழ்கள் நமக்குத் தந்திருக்கின்றன!!

என்றாலும், இது தொடர்பான சிந்தனையை மத்திய அரசு விரிவுபடுத்தாமல், புதிய முறைகளைப்பற்றி ஆலோசிக்காமல், கட்டாயமாக மலடாக்குவது என்ற திட்டத்தில், அறுவைச் சிகிச்சையைக் கட்டாயமாக்கிவிடுவது பற்றிய சிந்தனையிலிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவேண்டியது மிகமிக அவசியமே ஆனாலும், தேர்ந்து எடுத்திருக்கிற வழிமுறை, மிகமிக வருந்தத்தக்கது என்பதிலும், இந்த முறை, மக்களது உணர்ச்சி தொடர்பானது என்பதிலும், உணர்ச்சியினை அறைகூவலுக்கு அழைப்பது என்பதிலும் ஐயமில்லை.

மனிதாபிமான அடிப்படையிலும், பொதுநலன் பற்றிய விரிந்த சிந்தனைத் தெளிவின் அடிப்படையிலும் கவனிக்கவேண்டிய ஒருபிரச்னையைக் கட்டாயம் மூலம் செயலுக்குக் கொண்டுவரும் போக்கு வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும்.

> எந்த ஒன்றையும் கட்டாயம் மூலமே செயலுக்குக் கொண்டுவந்துவிட முடியும் என்ற போக்கு, மத்திய அரசுக்கு வர வர அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்த மனப்பான்மை டில்லிப் பேரரசுக்கு உடனடியாக மாறியாக வேண்டும்.

அது மட்டுமல்லாமல், பிள்ளைப் பேறு விஷயம், மனித உணர்ச்சியைப் பொறுத்த விவகாரம் மட்டுமல்லாமல், மனித அடிப்படை உரிமை பற்றிய விஷயமுமாகும்,

தன் அடிப்படை உரிமையை விட்டுக் கொடுக்க—அதுவும் நிர்ப்பந்தத்தின் பேரில் விட்டுக் கொடுக்க எந்த மனிதனும் தயாராக இருக்கமாட்டான்!

தமிழக அரசின் சில கடன்களை சில ஆண்டுக் காலத்துக்குத் தள்ளி வசூலித்துக்கொள்ள ஒரு பேரரசு—2000 கோடிக்கும் மேல் வருவாயுள்ள ஒரு அரசு ஒப்புக்கொள்ளாமல், உரிமை முழக்கம் எழுப்புகிறபோது—

பிறப்புரிமை தொடர்பான ஒரு உரிமையை மனிதன் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

முடியாது—கூடாது என்பதனைத்தான் இந்தக் கிழமை மக்களவையில் கட்டாய அறுவைச் சிகிச்சை ஏற்பாட்டினை வன்மையாக, பல உறுப்பினர்கள் கண்டித்திருக்கிறார்கள்.

'இது ஒரு யோசனைதான்—முடிவு அல்ல' என்று அமைச்சரும் பதிலுரைத்திருக்கிறார்.

இந்தப் பதிலைப்போல், கட்டாயத் திட்டம் ஒரு யோசனையாகவே இருக்கட்டும்; செயலுக்கு வந்துவிடக் கூடாது.

பிரச்னைகளைச் சமாளிக்கும் ஒரு தீர்வாக இது கட்டாயப்படுத்தப்படுமானால் இந்திய நாட்டின் பல குடும்பங்கள் நாசமாகிப் போகும்! எதிர்காலத்தில் நாட்டின் அமைதிக்குப் பங்கம் வந்து சேரும் என்பதை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

---

**முகப்பில்:- செங்கை மாவட்ட தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்,**

டி. இராசரத்தினம்—திருப்பெரும்புதூர்

அ. பொ. அரசு—திருவொற்றியூர்

கா. வேழவேந்தன்—கும்மிடிப்பூண்டி

# பதவிக்கு வந்த பிறகும்..........

தி. மு. கழகத்தவர், தாங்கள் குடும்பத்தின் மூத்தவன் முதலமைச்சராகியிருப்பது குறித்து அவர்கள் தம் ஆசை ஈடேற்றம் கண்டுவிட்டதன் காரணமாகத் துள்ளிக்குதிக் கின்றனர். ஆனால் எத்தனைப் பெரிய பளுவை நான் தாங்கிக் கொண்டிருக்கிறேன்; பதவியேற்பிற்கு முன் இரவு நான் தூங்கவே இல்லை பிறகு இன்று வரை நாள் ஒன்றுக்கு நான்கு மணி நேரம்கூட நான் தூங்குவதில்லை.

தி. மு. கவினர் கடந்த இரண்டாண்டுகளாக நாம் பதவிக்கு வருவது உறுதி என்று பேசும் பொழுது எனக்கு எரிச்சல்தான் ஏற்பட்டது; இப்படி ஏற்படாவிட்டால் எப்படி யிருக்கும் என்றுதான் எண்ணி வந்தேன் மழைவரும் என்று கிராம விவசாயி இயற்கையான தனது நுண்ணறிவால் கூறுவதைப் போன்று தி. மு. கவினர் கூறிவந்தனர் என்பது தேர்தல் முடிவுகள் காட்டிவிட்டன.

தேர்தலில் வெற்றி பெற்ற தி. மு. க-வினரில் 28 வழக்குரைஞர்கள் 2 பொறியியல் வல்லுனர்கள் 15 பி. ஏ எம். ஏக்கள். 5 அல்லது 6 வணிகர்கள். 40 அல்லது 50 விவசாயிகள் உள்ளனர்.

பதவி பெற்ற பிறகும். நான் அதே சட்டை, உடை, நடையுடன் இருப்பதைப் பார்த்திடும் சிலர் வருத்தப்படுகின் றனர்; பதவிக்கு வந்த பிறகும் கூட ஒரு வித வித்தியாசமும் இருக்கக்கூடாதென்பதில் நாங்கள் கண்டிப்பாகவே இருக் கிறோம்.

தி. மு. "கவினர்" எத்தனை எத்தனை அறப் போராட்டங் கள், தடியடிகள், இழி மொழிகள் இன்ன பிறவற்றைத் தாங்கிப் பயணம்வந்தோம். 15 சட்டமன்ற உறுப்பினர் 50 ஆக உயர்ந்தவுடனேயே, எப்படி இவர்கள் வந்தனர், மக்கள் ஏன் இந்தச் சாமானியர்களை ஆதரித்தனர் என்று வியப்பில் ஆழ்ந்தனர் காங்கிரசார். 1967-ம் ஆண்டு தேர்தலில் தி. மு. க,வினர் வரலாறு முடிவாக்கப் பெற்றுவிடும் என காங்கிரசு பெருந்தலைவர் திரு. காமராசர் பேசினார்; படுத்துக் கொண்டே காங்கிரசு வெற்றி பெறும் என்றார்.

30 ஆண்டு அனுபவமும் தேர்தலில் வல்லவர் என்ற பெயர் பெற்றவருமான திரு. காமராசர் பேசியதைக் கண்டு 50இலட்சம் 1கோடி என்கிறஅளவில் தேர்தல்நிதி வைத்திருக் கின்றனரே, ராஜாக்களும், ஜமீன்தார்களும், ஆயிரமாயிரம் பேர்கள் "ஆண்டே! ஆண்டே!" என்று சுற்றியபடி இருக்கும் நிலப்பிரபுகளும் காங்கிரசு பக்கம் வரிந்துகட்டி நிற்பதை யும் பார்த்து, எனக்கே அச்சமாகத்தான் இருந்தது.

எப்படி ஜெயிப்பீர் என்று கூறிய காங்கிரசார். தேர்தல் சூறாவளிக்குப் பின் எத்தனை நாளைக்கு பதவியிலிருக்க முடி யும் என்று கேட்கத் தலைப்பட்டுவிட்டனர். எத்தனை நாளைக்கு இருந்தால் மக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ அத்தனை நாளைக்கு இருப்பேன். இத்தனை நாளைக்கு இருந்தேயாக வேண்டும் என்று ஒட்டிக் கொண்டிருக்க மாட்டேன்; எந்த நிமிடம், மக்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை என்று நினைக்கிறேனோ அடுத்த விநாடியே பதவியை உதறி எறிந்து விட்டு விலகுவேன்.

ஒரு வருடம் இரண்டு வருடம் பொறுத்திருந்து காங்கிரசார் கணக்குப் பார்த்திருந்தால் நான் வர வேற்றிருப்பேன். மார்ச் மாதம் 6-ம்தேதியே என்ன செய்துவிட்டார்கள் என்று திரு, பக்தவத்சலம் கேட்டார் 20 வருடம் பதவியிலி ருந்தவர் 24 மணி நேரத்திற்குள் கேட்கத் துணி கிறார் நாங்கள் ஒன்றும் புகழால் அர்ச்சிக்கப் பெற்றவர்களல்லவர். வெட்டவெளியில், கொட் டும் மழையில் பிறந்தோம். ஏச்சையும், இழிவு பேச்சையும் கத்திக் குத்துகளையும், படுகொலை யும் சதிகளையும் மிரட்டல்களையும் ஏராளமாக சந்தித்தவர்கள் நாங்கள்.

எங்களை மக்கள் பதவியில் அமர்த்தியுள்ள னர் எனில், எங்கள் தனித் திறமையைக் கண் டல்ல 20 வருட ஆட்சியின் பயனால் 20000 கோடிரூபாயைப்பாழாக்கியதன்றி கள்ளமார்க்கட் காரரைக் கொழுக்க வைத்ததற்கும், கொள்ளைக் கூட்டத்தினருடன் கூடிக் குலவியதற்கும். ஒரே முடிவிற்குக் கொண்டுவரவும் இவர்கள் பிடியிலி ருந்து தப்பவுமே மக்கள் உள்ளத்திலே ஒரு யாகத் தீ போன்று உணர்ச்சி ஏற்பட்டு, இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் நன்றாக உணர்வேன். —குடந்தையில் முதலமைச்சர்.



தமிழக முதலமைச்சர் உதவிப் பிரதமர், மொரார்ஜிதேசாய் அவர்களை சென்னை அசோகாஓட்டலில் ஜூலைத்திங்கள் 30ம் நாள் வரவேற்ற காட்சி.

# மொரார்ஜியின் முதல் வருகை!

— எஸ். ஆர். —

தமிழக முதலமைச்சர் பதவியேற்றவுடன் புதுடில்லி சென்று வந்ததும் மொரார்ஜிதேசாய் புதிய நிதியமைச்சராகத் தமிழகம் வந்து சென்றிருப்பதும் உற்றுக் கவனிப்பவர்களுக்கு வேறுபாடுகளை எளிதில் காட்டுவதாக இருக்கிறது.

புதியவர் — புரட்சிகரமாக இருப்பவர்—பெரிய பெரும்பான்மைஉடையவர் — எப்படி எப்படியெல்லாம் இருப்பாரோ என்று அங்கே உள்ளவர்கள் வீணான கலவர உணர்ச்சிகளில் — திகைப்புச் சூழ்நிலைகளில் இருந்தபோது . அரசியல் தென்றலாகத் தலைநகர் சென்று வந்தார் அண்ணா.

"அரசியலறிவையும் சிந்தனைக் கூர்மையையும் காட்டிச் செல்கிறார் அண்ணாதுரை."

—என்ற தலைப்பில் ஆங்கில நாளிதழ் ஒன்றின் சிறப்புச் செய்தியாளர் அப்போது கட்டுரை எழுதியிருந்தார்.

இப்போது அரசியல் உலகத்தின் சிறப்பான கவனத்தை ஈர்க்கும் வகையில் சென்ற கிழமை தமிழகத்தின் தலைநகர் வந்து சென்றுள்ள மொரார்ஜிதேசாயின் பயணத்தைப்பற்றியும் புதுடில்லியிலிருந்தாலும் அதே இந்து நாளிதழின் சிறப்பு நிருபர் தொலைதூர விமர்சனம் ஒன்றைத் தருவாரானால் இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உதவியாக இருக்கும்.

பொறுப்புக்குப் புதியவரான அண்ணா அங்கே எதிர்பார்த்ததற்கு மாறாக அரசியலறிவையும் சிந்தனைக் கூர்மையையும் காட்டிவிட்டு வந்தார்.

பொறுப்பில் இருந்து பழக்கப்பட்டவரும் இப்போதும் இந்தியாவின் இரண்டாவது மாபெரும் பொறுப்பினை வகிப்பவரும்—அந்தப் பொறுப்பினைப் பெறுவதற்கு மாதவம் செய்தவரும்—நாட்டின் நிர்வாகம் மட்டுமல்லாத நிதி இலாகா நிர்வாகத்தினையும் பெற்றிருப்பவருமான மொரார்ஜிதேசாயின் இரண்டு நாள் சென்னை வருகை அண்ணா புதுடில்லிப் பயணத்தில் காட்டி வந்த பெருந்தன்மைக்கு பொறுப்புணர்ச்சிக்கு—நிதானத் தன்மைக்கு நேர் மாறானதாக இருக்கிறது.

தேர்தல் காலத்தில் கட்சிப் பணிக்காக வந்தவர்போலத்தான் கலந்துகொண்ட பெரும்பான்மை நிகழ்ச்சிகளில் பேசியிருக்கிறாரே தவிர,

இந்தியாவின் நிதியமைச்சராகவோ — ஒன்பதாவது மாநிலமும் காங்கிரசிடமிருந்து கை நழுவிவிட்டது என்பதனை உணர்ந்தவராகவோ — மாற்றுக் கட்சியின் நிர்வாகத்தில் கொண்டிருக்கும் ஒரு மாநிலத்தில் மத்திய அரசின் பிரதிநிதியாக வந்திருப்பதனைத் தெரிந்து வைத்திருப்பவராகவோ தெரியவில்லை.

யாரைக் கேட்டுக்கொண்டு வாக்குக் கொடுத்தீர்கள்?

கொடுத்தபோது மட்டும் ஏன் கடனை வாங்கிக்கொண்டீர்கள்?

கடன் கொடுத்தால் கேட்காமல் இருப்பார்களா?

'தமிழ்நாடு' வாயில் நுழைகிறதா மாற்றம் தேவையில்லையே?

எதிர்க்கட்சிகளுக்கே எப்போதும் பதவி ஆசைதான்.

இப்படி முழுக்கமுழுக்கஒருஅரசியல் வாதியாகத் தன்னைக் காட்டிக் கொண்டிருக்கிறாரே தவிர—

மத்திய அரசின் நிதியமைச்சராக நாட்டின் துணைப் பிரதமராக—

பொறுப்பான ஒரு போக்கில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளவில்லை.

புதுடில்லி கை விரித்தும் ரூபாய்க்குப் படி அரிசி தரும் திட்டத்தை,

நடுத்தர ஏழை மக்கள் பாராட்டும் பட்ஜெட்டை,

கடனுக்காக வட்டியைத் தள்ளிப் போடாத நிலையிலும் வவசாயப் பெருக்கத்திற்காக எடுக்கப்படும் முயற்சிகளை,

முற்றிலும் புதியவர்கள் என்ற உண்மையே தெரியாத வகையில் தடங்கல்—நெரடிப்பு இல்லாத நிர்வாகத் திறமையினை மத்திய அரசின் பிரதமர் என்றவகையில் மொரார்ஜி தேசாய் பாராட்டியிருந்தால் அவரை 'பெருந்தன்மையுடையவர்' என்ற அரசியல் உலகம் பாராட்டியிருக்கக்கூடும்.

நாட்டின் நிர்வாக இயந்திரத்துக்கே சிறிதும் தொடர்பு இல்லாத கட்சித் தலைவர் காமராசர்கூட தமிழக விவகாரத்தில் மௌனம்—நிதானம் எச்சரிக்கை ஆகியனவற்றைக் கடைப்பிடிக்கிறார்.

ஆனால் மொரார்ஜி தேசாய் முதலில் தன்னை ஒரு நிதியமைச்சர் என்பதை மறந்து கட்சிப் பிரசாரகர் போல — அதுவும் தேர்தல் நேர மேடைப் பேச்சாளர்போல பொறுப்பில்லாத அரசியல் பேசிச் சென்றிருக்கிறார்

'யாரைக்கேட்டுக்கொண்டுவாக்குக் கொடுத்தீர்கள்' அந்த கேள்விக்கு அண்ணா அவர்கள் இரண்டு திங்களுக்கு முன்னரே சேலத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் தக்க பதிலளித்துவிட்டார்கள்.

யாரையும் கேட்காமல் நட்ட நிசியில் நாணய மதிப்பைக் குறைத்து இன்றைய சிக்கல்களுக்கெல்லாம் மேலும் ஊட்டமளித்த மத்திய அரசினரைப் பார்த்து,

"ஒட்டிய வயிற்றுடன் அரிக்கலையைப் பார்த்து அழுத சிறுவனைக் கேட்டு கைக்குழந்தையுடன் கடைக்குக் கடை ஏறி ஏறி இறங்கிய தாயைக் கேட்டு ரூபாய்க்கு படி அரிசி தரமுடியும் என்று வாக்களித்தேன் என்று அண்ணா அவர்கள் தந்த மெய் சிலிர்க்கவைக்கும் விளக்கம் தேசாயின் காதுகளுக்கு எட்டவில்லையா அல்லது கல்நெஞ்சத்துக்குத் தெரியவில்லையா என்பது வியப்பாக இருக்கிறது.

'மத்திய அரசின் மானியமோ சலுகையோ இல்லாமல் இத்திட்டத்தை இன்னும் விரிவாக்கப்போகிறீர்கள் என்று கேள்விப்பட்டேன்; என்னால் தந்துதவ முடியவில்லை இருந்தாலும் பாராட்டு—திறமைக்கு மகிழ்ச்சி' என்று சொல்லியிருக்க வேண்டிய தேசாய் தமிழக அரசு தரும் அரிசியை தனது புதுடில்லி அடுக்களையில் ஏற்றி இறக்கி சமைத்துப் பார்த்தவர்போல் மூன்றாந்தர அரிசிதானே என்று பெண்களைப் போல் விமர்சித்திருக்கிறார்!

நிதியமைச்சர் பொறுப்புக்கு துணைப் பிரதமர் தகுதிக்கு இது

சரியான பேச்சல்ல என்பதனை அவர் இனிமேல் உணர வேண்டும்.

அரசியலும் அமைதியாகச் செல்கிறது. மக்களும் மன மகிழ்வுடன் இருக்கிறார்கள் — காமராசர் வேறு நிதானம் நிதானம் என்று மௌனம் காட்டுகிறார். ஒன்றும்வேலையில்லாத காரணத்தினால் மனம் புழுங்கும் தமிழகக் காங்கிரஸ்காரர்களுக்கு வேண்டுமானால் தேசாயின் பேச்சு உணர்ச்சியூட்டக் கூடியதாக இருக்க முடியுமே தவிர—

அண்ணா புதுடில்லி சென்ற போது காட்டிவந்த அரசியலறிவை சிந்தனைக் கூர்மையை தேசாய் தமிழகம் வந்து சென்றிருக்கும் போது காட்டவில்லை என்பதனை நடுநிலைமையுடன் பார்ப்பவர்கள் உணர்கிறார்கள்.

சேலம் தூத்துக்குடித் திட்டங்கள் பற்றியும் அற்கான தி. மு. க. வின் எழுச்சி நாள் குறித்தும் மத்திய மாநில அரசுகளிடையே இனி வகுக்கவேண்டிய அதிகார வரம்பு முறைகள் பற்றியும் தேசாய் காட்டியிருக்கும் அலட்சியப் போக்கு காங்கிரசின் நாட்கள் எண்ணப்பட்டு வருவதனையோ நாளும் அதன் மாநில நிர்வாகங்களின் எண்ணிக்கை குறைந்து வருவதனையோ உணர்த்துவதாக இல்லை.

மாநில மத்திய அரசுகளின் அதிகாரம் பற்றி புதியாக என்ன பேச இருக்கிறது? ஏற்கனவே எல்லோரும் ஏற்றுக் கொண்டுதானே அரசியல் சட்டத்திலும் இடம் பெற்றிருக்கிறது என்றும் சேலமும் தூத்துக்குடியும் இல்லையென்று யார் சொன்னது; இலாபகரமான இல்லை நிதி நிலையும் சரி இல்லை என்றுதானே கூறுகிறோம் என்பதும் அரசியலே தெரியாதவர் பேசுவது போல இருக்கிறது; அல்லது அரசியலே தெரியாதவர்களிடம் பேசுவதுபோல் உள்ளது.

ஒரு காங்கிரஸ் பேச்சாளராகத் தேசாய் வந்து சென்றிருப்பாரானால் கூட அவரது சென்னைப் பேச்சுக்களைப்பற்றி அதிகமாக பொருட்படுத்தத் தேவையில்லை

ஆனால் அவர் வந்து போயிருப்பது பொறுப்புள்ள நிதியமைச்சராக! நாட்டின் துணைப் பிரதமராக!!

அதுவும் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதன் முறையாக!

இந்த வகையில்தான் அண்ணா முதலமைச்சராக முதன் முதல் புதுடில்லி சென்று வந்ததும் தேசாய் துணைப் பிரதமராக சென்னை வந்து சென்ற நிகழ்ச்சியும் தரத்தில்— முக்கியத்துவத்தில் வேறுபடுகிறது.

# படிப்போம்! படிக்கச் சொல்வோம்!

— புலவர் பொன்னிவளவன் —

நல்லபல ராமன்பூங் குன்றன் அன்பு
நண்பன்சிவ. நடராசன் இவர்க ளோடு
மெல்லநடை போட்டேன்நான்! மாலை நேரம்!
மெதுவாக நடராசன் தொடங்க லானார்
''எல்லோரும் முன்னேற்றக் கழகத் தால்தான்
இனியதமிழ் வளர்ந்ததென்பர்; கொஞ்சம் உண்மை!
நல்லதமிழ் அறிமுகத்தைச் செய்த கட்சி
நாடாளும் இக்கட்சி! ஆனால்...?'' என்றார்.

''என்னைநீர் குறைசொன்னால் பொறுத்துக் கொள்வேன்!
இன்னுயிராம் கழகத்தைக் குறைத்துச் சொன்னால்
என்றாகும் எனப்பின்னால் புரிந்து கொள்வீர்!''
எனச்சொல்லிப் பலராமன் குமுற லானார்!
''என்றைக்குக் காங்கிரசான் கூலி ஆனீர்?''
எனக்கேட்டார் பூங்குன்றன்! ''அவரைக் கொஞ்சம்
சொன்னதனை முடிப்பதற்கு விடுங்கள்!'' என்று
சொன்னேனென்நான்! நடராசன் தொடர்ந்து சொன்னார்!

''மறுமலர்ச்சித் தமிழ்படைத்தார் அறிஞர் அண்ணா!
மறுக்கவில்லை; மறக்கவில்லை! இந்தி இங்கே
வரும்வேகம் தனைக்கண்டு தீயில் வெந்து
வரலாற்றுப் புகழ்பெற்றான் சின்ன சாமி!
குரங்கின்கைப் பூமாலை யாகி நாடு
கொடுமையிலே இருந்தபழம் நாளில் மக்கள்
விரும்பும்வகை தமிழ்காக்கப் பாடு பட்டீர்!
வெற்றிகண்டீர்! தமிழ்வளர்க்க முயலு கின்றீர்!

கோட்டைக்குத் தமிழ்ப்பெயரை வைத்தீர்! நல்ல
குறளுக்கு மதிப்பளித்தீர்! இந்தி யின்மேல்
காட்டுகின்றீர் பெருவெறுப்பு! ஆனால் முன்னோர்
காவியத்தை—இலக்கணத்தை உயர்ந்த பத்துப்
பாட்டுதனை நல்எட்டுத் தொகையை இன்னும்
பதினெண்கீழ்க் கணக்கையெலாம் படித்த துண்டா?
நாட்டுமக்கள் தமைஇவற்றைப் படிக்கச் சொல்லி
நாள்தோறும் சொன்னதுண்டா?'' என்று கேட்டார்!

அன்புள்ள தோழர்களே! இந்தக் கேள்வி
அனைவருக்கும் பொதுவான நல்ல கேள்வி!
இன்பமொழித் தமிழ்ப்பயிரை மேய வந்த
இந்தியெனும் ஆட்டைநாம் விரட்டு கின்றோம்!
என்றாலும் பயிர்வளரத் தண்ணீர் தேவை!
இனியதமிழ் வளர்ந்திடநம் உழைப்பு தேவை!
அன்பழகன் நல்அப்பாத் துரைபோல் கல்வி
அமைச்சர்நெடுஞ் செழியன்போல் தமிழைக் கற்பீர்!

புறம்சொல்லும் வீரத்தில் கொஞ்சம் சொன்னால்
போதாது! புறநானூ றனைத்தும் கற்பீர்!
அறம்சொல்லும் திருக்குறளில் ஏதோ சொல்லி
அதுபோதும் என்றிருத்தல் நல்ல தில்லை!
திறமான தமிழ்ப்புலமை பெறுதல் வேண்டும்!
தேன்தமிழ்நூல் அத்தனையும் படிக்க வேண்டும்!
மறவாதீர் உயிர்த்தமிழை! இலக்கி யங்கள்
மணிக்கணக்கில் படிப்போம்!நாம் படிக்கச் சொல்வோம்!

# தீ யார்?

— களகு —

குமாரசாமி தன் குடிசை எதிரே மிதி வண்டியில் வந்து இறங்கினான். இரண்டு பக்கங்களிலும் ஓலைக் குடிசைகள் நெருங்கியடர்ந்த அந்தக் கோணல் மாணலான சிறிய தெருவில் இப்படியும், அப்படியும் தன் பார்வையைக் கம்பீரமாய் ஒரு முறை செலுத்திவிட்டுத்தான் ஏறி வந்த மிதி வண்டியை முன்னும், பின்னும் பெருமிதத்தோடு பார்த்துக் கொண்டான். அந்த மிதி வண்டி அவனுடையது அன்று காலையில் தான் அதை வாங்கியிருந்தான். அப்படியொன்றும் தொழிற்சாலையிலிருந்து நேரே அவன் கைக்கு மாறிய பளபளக்கும் புத்தம் புது மிதி வண்டியல்ல அது. அவன் அலுவல்புரியும் நிறுவனத்தில் அவனுக்கு வேலை ஏவு எழுத்தர்களில் ஒருவர் நீண்டகாலம் பயன்படுத்தியிருந்த பழைய வண்டிதான் அது. அந்தப் பழைய வண்டியை அவன் வாங்குவதற்கு எத்தனைப் பாடுபட்டான்! எவ்வளவு காலமாய்ப் பிரயாசை எடுத்தான் எத்தனை இரவுகள் தூக்கம் பிடிக்காமல் அந்த வண்டியைப்பற்றி அவன் இன்பக் கனவுகள் கண்டுகொண்டிருந்தான். அவன் ஆசை இன்று பூரித்து மலர்ந்து வெற்றியாய்ப் பரிணமித்துள்ளது. ஒரு கையில் மிதிவண்டியின் கைப்பிடியைப் பிடித்தவாறு திரும்பத் திரும்ப ஆராய்ந்து ஆராய்ந்து அதைப் பார்த்துப் பார்த்துப் பெருமிதத்தால் அவன் திணறி நின்றான்.

மௌண்ட் சாலையில் உள்ள அந்தப் பெரிய நிறுவனத்தில் அவன் வேலைக்கமர்ந்த கடந்த பத்தாண்டுக் காலத்தில் கடைசி மூன்றாண்டுகளைத்தான், அவன்தன் சைக்கிளும் கையுமாய் நிற்கின்றானே ஓலைக் குடிசை-அந்தக் குடிசையில் கழித்து வருகிறான். அவன் மட்டுமா? அவன் பின்னால் — அவனுடைய தனி உழைப்பால் வயிறு கழுவவேண்டிய —ஒரு பெரிய குடும்பம். விளைத் தெரியாவிட்டாலும் நன்றாகப் பேசவும், நடக்கவும் தெரிந்த குழந்தைகள் இரண்டு. மழலைகள் இரண்டு. ஒன்றரைமாதக் கைக்குழந்தை ஒன்று. அவன் மனைவி எப்படித்தான் அந்த ஐந்து குழந்தைகளுக்கும் தாயானாளோ! அடிநாள் முதல் நோயாளு உடல் — பெரும்பான்மை பசி நோய்தான்—நோஞ்சான் தோற்றம்.

ஆரம்பத்தில் கூவத்தின் கரையில், அதன் குடலைப் பிடுங்கும் நாற்றத்தைத் தங்கள் உடலோடு, உயிர்ப்போடு பழக்கிக்கொண்டு ஒரு சிறிய குடிலில் குடியிருந்தது அந்தக் குடும்பம். திடீர் என்று பெய்த மழையில் சடீர் என்று வந்த வெள்ளம் வெய்யிலுக்கும் மழைக்கும் அரைகுறையாய் அவர்களுக்குப் புகல் தந்துகொண்டிருந்த அந்தக் குடிலை அதற்குள்ளிருந்த சட்டிப்பானை முதலிய தட்டுமுட்டுகளோடு, அந்தக் குடும்பத்துக்குத் தேவையான ஒரு வார உணவுப் பொருட்களோடு, கட்டிக்கொண்டிருந்த துணிகள் போக எஞ்சிக்கிடந்த கந்தல் குவையோடு, ஐந்தாறு ரூபாய்களோடு அடித்துக்கொண்டுபோய்— நடுக்கும் குளிரில், நள்ளிரவு வேளையில் அவர்களை நடுத்தெருவில் நிறுத்தி விட்டுச் சென்றது.

அப்புறம் ஆறேழு மாதங்கள் மௌண்ட் சாலையில் ஓர் நடைபாதையில் அந்தக் குடும்பம் கடை பரப்பிக்கிடந்தது. பின்னர் சிந்தாதிரிப்பேட்டையில் ஏதோ ஒரு சந்தில் எட்டடிக்கு நாலடி குச்சு ஒன்று அவர்களுக்குக் குடிக்கூலிக்குக் கிடைத்தது.

அந்த எட்டடிக்கு நாலடி குச்சிலேயே எப்போதுமே வதிய முடியாது என்று ஒருபுறம் அந்த எட்டடிக்கு நாலடி நிலமடந்தை தனக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடிக்கொண்டிருந்த பக்கத்துப் பெருமாளிகையின் பெரிய மனிதனும். மறுபுறம் பல்கிப் பெருகிக்கொண்டிருந்த அவனது குடும்பமும் இடித்து, இடித்து எச்சரிக்கைவிடுத்துக்கொண்டிருந்தன. (இருந்தனர்— பெரிய மனிதன் உயர்திணையாயிற்றே)

குமாரசாமி இப்போது பெரிய அட்வென்ச்சரர் ஆனான். தான் கடைநிலை ஊழியனாய்ப் பணியாற்றும் மௌண்ட்சாலை நிறுவனத்துக்குக் கால்நடையாகவே செல்லக் கூடிய தொலைவில் — ஏறத்தாழ இரண்டு, மூன்றுகல்தொலைவில்-ஓர் இடத்தைத் தேடி — சேரிப் பகுதியில்தான்—சலியாமல், சளைக்காமல் காலையும், மாலையும் அலைந்தான். புதிய கண்டம் ஒன்று கண்டுபிடித்தாற்போல் மூன்று மாதத்திற்குப் பிறகு அவனது அட்வென்சர் வெற்றிமுகம் காட்டியது. மறுபடியும் ஆற்றோரமாய் — இது பக்கிங்ஹாம் கால்வாய்—மைலாப்பூர் பகுதியில் அடைந்து நிறைந்துகிடக்கும் சேரிக் குடிசைகளுக்கு மத்தியில் ஒரு பத்தடிக்கு ஐந்தடி இடம் மேடும் பள்ளமுமாய், கல்லும்முள்ளுமாய்க் காலியாய்க் கிடந்தது. அந்தப் பத்தடிக்கு ஐந்தடி மேடுபள்ளத்தின் — பொறை நிறைந்த நிலமாதாவின் சொந்தக்காரன் எங்கோ திருவொற்றியூர்ப் பக்கமிருந்தான். அவனைத் தேடிப்பிடித்து குமாரசாமி பேட்டி கண்டான்.

‘மனைக்கு வாடகை முன்னீடு ரூபாய் நூறு. இப்போதே அது கைக்கு வந்துவிட வேண்டும். மாதந் தவறினாலும் மனைவாடகை தவறக் கூடாது. தவறினால் அடுத்த நாளே குடிசையிலிருந்து சொல்லாமல், கொள்ளாமல் வெளியேறிவிடவேண்டும் வழக்கு வம்பு விவகாரம் கூடாது, எல்லாவற்றிற்கும் சம்மதம் என்று நான் நீட்டுகின்ற காகிதத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விட்டு நீ குடிசை போட்டுக் கொள். எக்காரணங் கொண்டும் போட்ட குடிசையைப் பிரிக்கக்கூடாது. எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் குடிசையை நான் காலி பண்ணச் சொல்ல நேரலாம், எந்த மறுப்பும்

காட்டாமல் அந்தக் கணமே குடிசையைக் காலி பண்ணுவதற்கு எப்போதும் சித்தமாயிருக்கவேண்டும்'' நில மாதாவின் சொந்தக்காரன் நிபந்தனை விதித்தான்,

'நீங்க சொன்ன எல்லா நிபந்தனைக்கும் நான் கட்டுப்படறேன். ஆனால் முன்னீடு நூறு ரூபாய் கேக்க நீங்களே அதுதான் என் கைவசமில்லே. பெரிய மனசு பண்ணி முன்னீடு இல்லாமே குடிசை போட அனுமதிக்கணும்.''

''உஊம் முடியாது. நூறு ரூபாய் இருந்தா பேசு. இல்லே நடந்துக்கினே இரு' என்று மிக மிகக் கண்டிப்பாகக் கூறிவிட்டார் அந்தப் பெரிய மனிதர்.

குமாரசாமி யோசித்தான். ஏதோ கடந்த இரண்டாண்டுக் காலமாகத்தான் மாதச் சம்பளம் அவனுக்கு அறுபது ரூபாய் வருகின்றது. தனியார் நிறுவனந்தானே, அரசு நிறுவனமா! அந்தச் சம்பளம் ரூபாய் அறுபதையும் நிதியாளரிடமிருந்து அவன் கைநீட்டி வாங்கும் அந்த ஒருகணம் இருக்கின்றதே அந்தக் கணநேரம் மட்டுந்தான் அவன் முழுமையாக அதைக் காண முடியும், வெளியே வந்ததும், தலைமறைவாய் உலவும் கொலைக் குற்றவாளியைத் திடீர் என்று சூழ்ந்துகொள்ளும் போலீஸ் குழுவைப்போல் கடன்காரர் கூட்டம் அவனைச் சூழ்ந்து அந்தச் சம்பளப் பணத்தைப் பறிமுதல் செய்து கொண்டுதான் அவனை விடுதலை செய்யும். விட்டு விடுதலையாகும் போது இரண்டோ, மூன்றோ, அதிகமாய்ப் போனால் பத்து ரூபாயோ அவன் சட்டைப் பைக்குள் நுழையும் இந்த நிலையில் நூறு ரூபாய் முன்னீடு அவனால் எப்படிச் செலுத்த முடியும்?

மேலே என்ன செய்வது என்று தோன்றாமல் அவன் தயங்கித் தயங்கித் திரும்பி நடந்தான், அவன் சிறிதுதூரம் நடந்த பிறகு அந்தப் பெரியமனிதர் அவனைக் கூப்பிட்டார்.

'உன்னுடைய நிலையைப் பார்த்து நான் பரிதாபப்படுகிறேன். போனால் போகிறது ஐம்பது ரூபாய் கொடு.''

''என்னிடம் பத்தே ரூபாதான் கைவசம் இருக்குது. அதை உங்கள் காலடியில் வைக்கிறேன். இதுக்கு மேலே இப்போதைக்கு என்னாலே எதுவுமே குடுக்கத் திராணி இல்லே ஏதோ தர்மத்துக்கு விடற மாதிரி எனக்கு அந்த இடத்தை விடணும்' என்று தன் சட்டைப் பையிலிருந்த பத்து ரூபாய்த் தாளை எடுத்து நெட்டை நெடுமரமாய் நிமிர்ந்து நின்ற அந்தப் பெரிய மனிதரின் காலடியில் வைத்தான் அவன். தான் சந்திக்கும் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்களிடம் — கடைநிலை ஊழியன் என்ற அளவிலும், வறியவன் என்ற நிலையிலும் அடங்கி, ஒடுங்கி, தாழ்ந்து, பணிந்துதானே அவன் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போது அவ்வளவு பேருக்கும் மேற்பட்டவராக தான் கோரும் பத்தடிக்கு ஐந்தடி நில மாதாவின் உரிமைக்காரரான அந்தப் பெரிய மனிதர் தோன்றினார்.

''சரி போனால் போகட்டும்' இப்போ பத்து ரூபாய் வைத்திருக்கிறாயா! எடு அந்தப் பத்தை' என்று நிமிர்ந்தபடியே கட்டளையிட்டார் அந்தப் பெரிய மனிதர்.

குமாரசாமி மறுபடியும் குனிந்து அந்தப் பெரியமனிதரின் காலடியில் வைத்த பத்து ரூபாயை எடுத்து அவரிடம் நீட்டினான்.

''இன்னும் பதினைந்து ரூபாய் சுதாரித்துக் கொண்டுவந்து கொடுத்து விட்டு நீ அந்த இடத்தில் குடிசில் போட்டுக் கொள்—'' என்று கையில் வாங்கிய பத்து ரூபாயோடு வீட்டுக்குள் நுழைந்துவிட்டார் பெரிய மனிதர்.

அதன்பின் இரண்டு மாதங்கள் பிடித்தன மீதிப் பதினைந்து ரூபாயை அவன் சுதாரித்துக் கொடுப்பதற்கு.

அப்புறம் ஓய்வுபட்ட போதெல்லாம் தன் கனவில் மாளிகையாய் உயர்ந்தோங்கி நிற்கும் தனது எதிர்காலக் குடிசை அமைய வேண்டிய இடத்திற்கு வந்தான். முதலில் நில மாதாவைச்சமப்படுத்தினான். மழைக் காலம் வந்துவிட்டது. மாதம் ஒன்றும், இரண்டுமாய்ப் பணம் சேர்த்தான். வெயில் காலம் ஆரம்பித்தது. தனியனாகவே வந்து சுவர் எழுப்பத் தொடங்கினான். ஓலை வாங்கினான். மூங்கில் வாரை வாங்கினான். சில வாரங்கள் கழிந்தன— பணம் சேர்த்துக்கொள்ள வேண்டுமே. அப்புறம் வேய்வோரை அழைத்தான்—என்ன பிரமாதமான வேய்வு—எதோ ஒத்தாசைக்கு அந்த ஆட்கள். குடிசில் எழும்பிவிட்டது. கதவுக்குத் தட்டி வாங்குவதற்கு முன்னரே அவனது குடும்பம் சில ஓட்டை, உடைசல் பானைகளோடு, கந்தல் மூட்டைகளோடு அந்தக் குடிசையில் புது மனை புகு விழா நடத்திவிட்டது.

அன்றுதான் குமாரசாமி எப்படி ஆடிக் களித்தான், புதியதொரு வாழ்வே பெற்றுவிட்டதாக. புதியதொரு உலகையே கண்டுவிட்டதாகவல்லவா அவன் பெருமகிழ்வு கொண்டான்.

மறுநாள அவன் உட்கார்ந்து கணக்குப் போட்டுப் பார்த்தான். இருநூறு ரூபாய் செலவாகியிருந்தது. இரண்டரை யாண்டுகள் ஓடி மறைந்திருந்தன. இன்னும் கதவுக்குத் தட்டி வாங்கவில்லை.

'அடே யப்பா! எவ்வளவு பெரிய தொகை—இருநூறு ரூபாய். எத்தனை நாள் உழைப்பு! மறுபடியும் இப்படியொரு காரியத்தை என்னால் செய்து பார்க்க முடியுமா?' ஏதோ செங்குத்தான வழுக்கல் பாறைமீது இரண்டு மைல் தொலைவு ஏறிச் சென்றுவிட்டு உச்சியில் நின்று கீழே பார்ப்பதைப் போல் அவன் உடம்பெல்லாம் சிலிர்த்தது.

ஓராண்டு காலம் எவ்வித மலைப்பும் பாராமல். அலுப்பும் கொள்ளாமல் சலிக்காமல் இந்த மைலாப்பூர் பகுதியிலிருந்து மௌன்ட் சாலையில் தான் பணியாற்றும் நிறுவனத்திற்கு தினம் தினம் நடந்தே போனான். ஒருதடவை வந்துபோன மழைக் காலம் மறுபடியும் வந்தபோன் அந்த மழையில் நனைந்தபடி தது

அடுத்த இதழில்

அமைப்புச் செயலாளர்

என். வி. நடராசன்

அவர்கள் எழுதும்

மலேசியப் பயணம் பற்றிய

சிறப்புக் கட்டுரை வெளிவரும் என்பதை மகிழ்வுடன் அறிவிக்கிறோம்.

—ஆசிரியர்.

தொழிற் பிரயாணத்தைத் தொடர்வது அவனுக்குப் படிப்படியாய் மலைப்பை உண்டாக்கியது.

முதலில் குடையைப்பற்றிக் கனவு கண்டான், அடுத்தாற்போல் சைகிள் ஒன்று இருந்தால் எவ்வளவு எளிதாய் இருக்கும் என்ற அவன் கனவு தொடங்கியது.

மனிதத் தன்மையிலும் இரக்க உணர்விலும் ஒருபடி தூக்கலாய் இருந்துகொண்டு அதே வேளை வறுமையையும் சுவைத்துக்கொண்டிருக்கும் எழுத்தர் ஒருவரிடம்—அப்படிப்பட்டவர்களால்தானே குமாரசாமிபோன்றவர்களிடம் மனந்திறந்து பேச முடியும்—தன் சைகிள் கனவை எடுத்துச்சொன்னான்.

"என் சைகிள் என்னவோ பழைய சைகிள்தான் — ஏழுவருடங்களுக்கு முன்னே வாங்கியது. இப்போது அதை விற்கவேண்டும் என்ற அவசியம்கூடக் கிடையாது; ஆனால் உன்பொருட்டு அதை விற்கச் சம்மதிக்கிறேன் மற்றவர்கள் நூற்றைம்பதுக்கு வாங்கிக்கொள்வார்கள், உனக்கு வேண்டுமானால் நூற்று இருபத்தைந்துக்கே தருகிறேன். ஆனால் பணம் கைமேல் வரவேண்டும். நானும் வேறு சைக்கிள் வாங்கவேண்டுமல்லவா! நூற்று இருபத்தைந்தே இப்போதைக்கு இல்லாவிட்டாலும் நூறு அல்லது எழுபத்தைந்து ரூபாய் கொடு. மீதியை மாதம் மாதம் சில்லறையாய்க் கொடுத்தாலும் சரிதான். நானும் வேறொரு சைகிள் வாங்கவேண்டுமே."

குமாரசாமி பணம் சேர்க்கத் தொடங்கினான். சைகிள் கனவு இடைவேளைவிடாமல் தொடர்ந்து தோன்றிக்கொண்டிருந்தது. மாதம் இரண்டு, மூன்று என்று எப்படி எப்படியோ நூறு ரூபாய் சேர்த்துவிட்டான். அதற்குள் எழுத்தரின் சைகிள் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பழையதாகிவிட்டதே!

இன்று காலையில்தான் குமாரசாமி நூறு ரூபாயை அந்த எழுத்தரிடம் கொண்டுபோய்ச் சேர்த்தான். அந்த எழுத்தர் சைகிளையும் கொடுத்து பத்து ரூபாயையும் அவனிடம் திருப்பிக்கொடுத்தார்.

குமாரசாமிக்கு ஒரே குதூகலம். அன்று குடிசையில் புதுமனைபுகுவிழா நடத்தியபோது இருந்த நிலையில் இன்று இருக்கிறான்.

அவனிடம் திருப்பிக் கொடுக்கப்பட்ட அந்தப் பத்துரூபாயில் என்ன வாங்கலாம் மிகவும் அவசியமான பொருள் என்று நெடுநேரம் யோசித்த பிறகுதான் அவன் போட்டிருக்கும் அவனது ஒரே சொக்காய் கிழிசல் கோலமாய் இருப்பதைப் பார்த்துக்கொண்டான். உடனே ஒரு ரெடிமெட் சட்டைவாங்கினான். அந்தப் புதிய சட்டையைப் போட்டுக்கொண்டு தன்னிடம் புதிதாய் வந்திருக்கும் அந்தப் பழைய சைகிளில் ஏறி இதோ தன் குடிசை எதிரே வந்து நிற்கிறான்—தலைகால் புரியாத பெருமிதத்தோடு.

அவனுடைய நோஞ்சை மனைவி புதிய சொக்காய்க்குள், சைக்கிளோடு நிற்கும் தன் கணவனைப் பார்த்துப் பூரித்து வெளியே வந்தாள். அவர்களின் குழந்தைச் செல்வங்கள் ஆடிப் பாடிக்கொண்டு சைக்கிளையும், தங்கள் தந்தையையும் சுற்றிச் சுற்றிவந்தன.

குமாரசாமி தன் சைக்கிளை வாகு பார்த்து குடிசிலுக்குள் கொண்டு போய் நிறுத்தினான். தன் புதிய சொக்காயையும், பழைய காக்கிப் பாண்டையும் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டு வெறும் அரை நிஜாரோடு தரையில் அமர்ந்தான். அவன் மனைவி அவனுக்கு சாப்பாடு பரிமாறுவதில் இறங்கினாள் — கஞ்சிதான்.

ஒருவாய் கஞ்சியை அவன் விழுங்கியிருப்பான். திடீரென்று அந்தக் குடிசை வட்டாரத்தில் பேரோலம் கேட்டது. குய்யோ முறையோவென்ற பயங்கரமான பேரோலம். அதைத் தொடர்ந்து எங்கணும் புகை சூழ்ந்துகொண்டது. அதிர்ச்சியின் நிறை தடுமாற்றத்தோடு அவன் வெளியே வந்தான். 'ஐயோ என் கூரை பற்றி எரிகின்றதே' என்ற ஓலம் அவனிடமிருந்தும் வெளிப்பட்டது. அவன் மனைவி குடிசிலுக்குள்ளிருந்த குழந்தைகளை வெளியேற்றுவதில் தீவிரமானாள். கணத்துக்குக் கணம் புகைமண்டலம் நெருங்கிச்சூழ்ந்தது. நொடிக்கு நொடி தீ ஜுவாலை மலையாக உயர்ந்தது. எங்கும் பேரோலம். எங்கும் அழுகுரல் எதையும் புரிந்துகொள்ள முடியாத அதிர்ச்சி, திகைப்பு, அல்லோல கல்லோலம்!

"ஐயோ, என் குழந்தை போய்விட்டதே" என்று குமாரசாமியின் நோஞ்சை மனைவி அலறினாள். அவளால் நான்கு குழந்தைகளைத்தான் காப்பாற்றமுடிந்தது. ஒரு குழந்தை தீயில் வெந்து கருகிவிட்டது. அப்போதுதான் உணர்வுவந்தவன் போல் குமாரசாமி குடிசைக்குள் பாய முனைந்தான். அவனது குடிசை அப்போது குடிசையாய் இல்லை. தீப்பிழம்பாய் இருந்தது, யாரோ அவனைப் பிடித்து இழுத்து நிறுத்தினார்கள்.

"ஐயோ, என் குடிசை போய்விட்டது. என் சைக்கிள் போய்விட்டது, என் குழந்தை போய்விட்டது. எல்லாம் போய்விட்டன. நான் மட்டும் இன்னும் ஏன் வெந்து கருகாமல் இருக்கிறேன்" என்று பித்தனாய்க் கத்தினான் அவன்.

வெறும் அரைநிஜாரோடு மேலே ஒன்றுமில்லாமல் கட்டையாய் நின்ற குமாரசாமியை சாலைக்கு இழுத்துவந்தார்கள் சிலர். அவன் பின்னோடு அவனுடைய நோஞ்சை மனைவியும், குழந்தைகள் நான்கும் அரற்றிக்கொண்டுவந்தன.

இப்படி ஒரு குமாரசாமியா! இன்னும் பல குமாரசாமிகள். என்னே 'தீ'யின் கோரவிளையாட்டு, தீயா? தீயாரா?

✻

## கவனித்தால் நல்லது!

புகை பிடிப்பவர்களா நீங்கள்? இதை கொஞ்சம் படியுங்கள்.

புகை பிடிப்பதனால் மனித உடலுக்கு எத்தனையோ வகையில் கேடுகள் சூழ்வதாகப் பலப்பல ஆராய்வுகள் கூறிவிட்டன. என்றாலும், எப்படி எப்படிக் கெடுதல்கள் வருகின்றன என்பதற்குப் புதியதொரு ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மனிதன், புகைபிடிப்பதால் எப்படி எப்படிப் பாதிக்கப்படுகிறான்? என் பதைக் கண்டறிய, இப்போது யெந்திரங்கள் சில புகைபிடிக்கத் தொடங்கி இருக்கின்றன.

நாளொன்றுக்குச்சுமார் 20,000 சிகரெட்டுகளை இந்த இயந்திரங்கள் புகைக்கின்றனவாம்!

தானே நெருப்புப் பற்றவைத்துக் கொள்வதும், சுண்டி, சாம்பலைத்தட்டுவதும், துண்டை வீசியெறிவதும், உடனே மற்றொன்று பற்றவைத்துக் கொள்வதும் இவற்றின் தொடர் அலுவல்கள்! ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் இயந்திரத்தில் படியும் புகையை ஆராய்கிறார்கள்!

ஆராய்ச்சிக்கு வெள்ளெலிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த வெள்ளெலிகளுக்குக் 'குடிசைகள்' போட்டு குடிவைத்திருக்கிறார்கள்!

ஆராய்ச்சியின் முடிவு இன்னமும் அறிவிக்கப்படவில்லை; ஆயினும், இதுவரை அறிவிக்கப்பட்டவற்றைவிடப் பயங்கரமானதாயிருக்கும் என்று மட்டும் நம்பப்படுகிறது.

இங்கல்ல! மே. ஜெர்மனியிலுள்ள ஹாம்பர்க் நகரத்தில்!!




3—13

## கனவில் வருர் பூதர்'

'நான் தப்ப, நீதான் காரணம் என்பது உன் தந்தைக்குத் தெரிந்துவிட்டதா, திருமேனி?' என்று குலசேகரன் கேட்டதும், அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ஆமாம் என்று சொல்வதைப்போல தலையை ஆட்டினுள்

'தங்களுக்குப் பதில் என் தலையை வெட்டி கோட்டை வாயிலில் வைத்தால்தான் தன் கோபம் தணியும் என்று கொக்கரித்தார். மந்திரியார் நந்திநாயகம் என் சார்பில் எவ்வளவோ வாதாடினுர். அப்பாவின் கோபம் தணியவில்லை, இதயம் இளகவில்லை! நாளை என்னைச் சிறையில் அடைக்கப் போகிருர் என்பது தெரிந்ததும் முன்னுளே என்னை இலங்கையை விட்டு வெளியேறிவிட, நந்திநாயகம் ஏற்பாடு செய்து தந்தார். அவர் இல்லாமலிருந்திருந்தால் என் பிணத்தைக்கூட தாங்கள் பார்த்திருக்க முடியாது. அத்தான்!' என்று துக்கம் நிறைந்த குரலில் கூறிவிட்டு, அத்தானின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

குலசேகரனின் முகத்தைத் திருமேனி ஏறிட்டுப் பார்த்த அதே நேரத்தில் — பொன்னையாவின் உருவப்படத்தைச் செந்தாமரை நீர் வழியும் கண்களால் பார்த்துக்கொண்டிருந்தாள்.

'பொன்னையா, நான் வந்திருக்கிறேன்! மல்லிகை மாலை உனக்குச் சூட்டி, கைகூப்பித் தொழவும்— உன்னைக் கல்லறையில் சேர்த்த அந்தக் காதகனை — பாண்டிய நாட்டின் வைரியான அந்தத் தூமகேதுவை — வெட்டி வீழ்த்தி, அவனது இரத்தத்தைக் கொண்டு, உனது கல்லறையைக் கழுவுகிறேன் என்றசபதம் எடுத்துக்கொள்ளவுமே வந்திருக்கிறேன்! கேள் நண்பனே. நன்ருகக் கேள்! இதோ சபதம் எடுத்துக்கொள்கிறேன்! அந்தச் சண்டாளனுன தூமகேதுவின் இரத்தத்தால் உன் கல்லறையைக் குளிப்பாட்டுகிறேன்! பொன்னையா குளிப்பாட்டுகிறேன்!' என்று பொன்னையா கல்லறை புகுந்த அன்றிரவு, சோலையப்பன் சொன்ன இந்த உணர்ச்சி வார்த்தைகள், அவள் காதில் முரசொலி செய்தன.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பொன்னையாவின் உருவப்படத்தை நன்ருக உற்றுப் பார்த்தாள்.

பொன்னையா! உத்தமரே! இதோ மலர் மாலை—அடுத்த முறை சந்திக்கும்போது. தூமகேதுவின் இரத்தம் என்று சொன்ன தங்கள் தோழர்— என் இதயத்து அரசர் — இன்று இல்லை! சொன்ன சபதத்தை நிறைவேற்ருமலேயே மயானத்தில் உங்கள் பக்கத்தில் வந்து படுத்துவிட்டார் அவர்! பாண்டிய நாட்டைப் பகுத்தறிவுச் சோலையாக்கப் பாடுபடும் தொண்டர்களை யெல்லாம் கதற விட்டுவிட்டு அவர் மறைந்துவிட்டார்! அவரை மயங்கி வீழ்த்தத் துணிந்த என்னை அடிமையாக்கி ஆருயிர் மனைவியாக்கிக் கொண்ட அந்தச் செயல்வீரர் நான் கதறி அழஅழ ஓடிவிட்டார்! பொன்னையா உங்கள் இலட்சியம் இறவாதது! எத்தனை சோலையப்பர்களைப் பலிகொண்டாலும் அது தேய்ந்து மறைந்துவிடாது! இதோ நான் இருக்கிறேன்! இந்தப் பாண்டிய நாட்டின் இளவரசியான — சோலையப்பனின் மனைவியான–நான் ஈடேற்றுகிறேன் அந்த இலட்சியத்தை! சொல் பொன்னையா சொல்! யாரைக் குத்திச் சாகடிக்க வேண்டும்? யாரை வெட்டி வீழ்த்தவேண்டும்? யார் இரத்தம் வேண்டும் பொன்னையா யார் இரத்தம் வேண்டும்? சொல்... என்று வீரத்தோடு கேட்டவள் தன், இரு கண்களையும் கைகளால் மூடிக்கொண்டு தேம்பி அழுதாள்.

'அம்மா!'

செந்தாமரை திரும்பிப் பார்த்தாள் கண்ணீர் வழிய சிதாரி அங்கே நின்றிருந்தாள்.

'சிதாரி! உன்னை யார் இங்கே வரச் சொன்னது? போ! இங்கே நில்லாதே போ!'

'அம்மா!'

'பேசாதே சிதாரி, பேசாதே! போய்விடு!'

'நான் சொல்வதைக் கேளுங்கள் அம்மா...'

கேட்கமாட்டேன்! யார் எது சொன்னுலும் இப்பொழுது என் செவியினுள் புகாது! தொந்தரவு தராதே சிதாரி! போ!போ! வெளியே போ!' என்று கடுமையான குரலில் உரத்து அவள் கூவியதும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சிதாரி வெளியே சென்றுவிட்டாள்.

தளர்ந்த நடையோடு அறையை விட்டுச் சென்ற சிதாரியைப் பார்த்தபடி நின்ருள். செந்தாமரை,

'கன்னிப் பெண்ணின் மனம் இருக்கிறதே அது கருங்கல்லைப் போலக் கரையாததுமல்ல—மண்ணுங் கட்டியைப்போல உடனே நீராகிவிடுவதுமல்ல! அது ஒரு விசித்திரமான பொருளால் செய்யப்பட்டது! அது எப்பொழுது இறுகும் எப்பொழுது தளரும் என்ற இரகசியம். அந்தப் பெண்ணுக்கே தெரியாது! உள்ளத்தின் போக்கு இருக்கிறதே — அது ஒரு காட்டுக் குதிரையின் ஓட்டத்தைப் போன்றதம்மா! ஓட ஆரம்பித்துவிட்டால், காடோ—மேடோ —மலையோ—பள்ளமோ —அதற்குத் தெரியாது! அந்த காட்டுக் குதிரையைப் போன்றதுதான். கன்னிப் பெண்ணின் மனமும்! அவளது உறுதியும் வைராக்கியமும், ஒரு ஆண் அழகனின் புன்னகைக்கு எதிரே புகையாகிவிடும்' என்று இரவில் சோலையப்பனைச் சந்திக்க வேண்டாம் என்று சிதாரி உபதேசம் செய்தது நின்றிருந்த செந்தாமரையின் நினைவிற்கு வந்தது.

'சிதாரி! அன்று நீ செய்த உபதேசத்தைக் கேட்டிருந்தால் மகிழ்ச்சி இழந்தவளாக–மாங்கல்யம் அற்றவளாக—இப்படி இன்று தவிப்பேனு? உடன் பிறந்த அண்ணனை ஆட்சிப்பீடத்தில் அமர்த்துவேன் என்று செய்த சபதத்தையும் காதலுக்காகக் கைவிடத் துணிந்தேனே!

கைவிட்டுக் கண்ட பலன் என்ன ஓடும் கண்ணீரோடு ஒண்டிமரமாக நின்றுவிட்டதுதானே! வேண்டாம். அவரை இரவில் சந்திக்காதே என்று நீ எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானுலும் நீரிலே இருக்கலாம் கருங்கல்—அது ஒன்றும் மண்ணுங்கட்டியைப்போலக்கரைந்துவிடாது என்று வீரம் பேசினேன்! அன்று வீரம் பேசியதற்கு இன்று அழுகிறேன் சிதாரி, அழுகிறேன்!' என்று சொல்லிக்கொண்டே அங்கே இருந்த ஓர் ஆசனத்தில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

'ஏன் எழுந்துவிட்டீர்?'

'என் பக்கத்தில் வந்து உட்கார் என்ருல் நீதான் நாணப்படுகிருயே! ஆகையால் நானே உன் பக்கத்தில் வந்து உட்கார்ந்துவிடுகிறேன்!'

வேண்டாம் அங்கேயே உட்காருங்கள்! இன்னும் கொஞ்சநேரம் பேசிவிட்டு...'

'பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து உடலோடு உடல் தேயப் பேசுவோம்—இன்பச் சந்தனம் பூசுவோம்! உட்கார் செந்தாமரை உட்கார்! எதற்காகக் கண்ணே இன்னமும் வெட்கம்! ஏன் இப்படி நடுங்குகிருய், இங்கே யார் இருக்கிருர்கள், நம்மைப் பார்க்க?'

'ஏன், பார்க்க எவரும் இல்லை என்று நினைத்துக்கொண்டு தான், இவ்வளவு துடுக்கும் துணிவும் கொள்கிறீர்களா?'

'யார் இருக்கிருர்கள்—சிதாரியைக் கூட நீ கீழே அனுப்பிவிட்டாயே—தடையாக இருக்கக் கூடாதென்று!'

'சிதாரி இல்லாவிட்டால் இதோ ...நிலவு...'

'பழைய கருத்தை எவ்வளவு சுவையாகச் சொல்கிருய், தேனே!'

'அது பழைய கருத்தா?'

'இல்லை' புதிய கருத்துத்தான் புளித்துப் போனது! கண்ணே மணியே கனியே கற்கண்டே மானே தேனே, மயிலே குயிலே, வண்ண மலரே வானவில்லே — என்றெல்லாம் காதலன் அழைக்கிருன் அல்லவா காதலியை!'

'ஆமாம், செம்பொற்பாவாய்! கொஞ்சும் கிளியே, நீ சொல்லியது உண்மையே! மாசறு பொன்னே! காசறு விரையே!...'

சோர்ந்து உட்கார்ந்திருந்த செந்தாமரை திடுக்கிட்டு எழுந்தாள்—தனக்கும் சோலையப்பனுக்கும் இந்த இன்ப உரையாடல் சிறிது நேரத்திற்கு முன்புதான் நடைபெற்றது போல. அவளுக்குத் தோன்றியது,

'அத்தான்! அத்தான்!' என்று தலையில் அடித்துக்கொண்டு. முகத்தை மூடிக்கொண்டு தேம்பினுள்,

"அத்தான்! நான் வேண்டாம் வேண்டாம் என்று தடுத்தபோது—விடுங்கள் விடுங்கள் என்று தங்களது பொன்னுன கன்னத்தில் நான் அடித்தபோதே—வலிய வலிய என் இதயத்தினுள் புகுந்துவிட்டீர்களே, அத்தான்! இன்று இப்படித் தவிக்க விடத்தானு, அன்று அப்படிச் செய்தீர்! எப்படி அத்தான் என்னை மறந்தீர்! உங்களுக்காக நான் செய்த சபதத்தைக்கூட கைவிட்டுவிட்டேனே! என் தாய் தந்தையரை, அண்ணன்மார்களை அக்கிரமமாகக் கொன்ற குலசேகரனே சிம்மாசனத்தில் இருக்கட்டும் என்று ஒத்துக்கொண்டேனே! தாங்கள் மகிழ்ச்சியோடு இருந்தால் போதும். என்பதற்காக நான் எதையும் இழக்கத் தயாராக இருந்தேனே! அத்தான்! இதோ உங்கள் செந்தாமரை அழுகிருளே, கேட்கவில்லையா! அவளது கண்களில் அருவியென கண்ணீர் வழிந்தோடுகிறதே—உங்களுக்குத் தெரியவில்லையா? நீங்கள் இல்லாமல் எப்படி அத்தான் வாழ்வேன்!...ஆமாம் வாழ்வேன் அத்தான், வாழ்வேன்! தங்கள் இலட்சியத்தை ஈடேற்றும் வரைக்கும் உயிர் வாழ்வேன்! நீங்கள் செய்த சபதத்தை—நான் நிறைவேற்றுகிறேன். பொன்னையாவின் கல்லறையின்மீது தூமகேதுவின் இரத்தத்தை நான் சிந்தச் செய்கிறேன்! பொன்னையாவின் ஆட்களை எல்லாம் திரட்டி, இந்தப் பாண்டிய மண்டலத்தில் சைவத்திற்கு எதிராக ஒரு மாபெரும் கொந்தளிப்பை உண்டாக்குகிறேன்! பாண்டிய நாட்டில் பகுத்தறிவின் ஒளி விசும்படிச் செய்கிறேன்! இது உறுதி அத்தான். இது உறுதி!" என்று அவள் உணர்ச்சியோடு பேசியதைக் கேட்டபடி சிதாரி அங்கேவந்தாள்.

"அம்மா"

"திரும்பவும் இங்கு ஏன் வந்தாய். சிதாரி?"

"அவன் வந்திருக்கிருன்!"

"எவன்?"

"தூமகேது!"

"இப்பொழுது நான் பார்க்க முடியாது என்று சொல்லி அனுப்பிவிடுவதுதானே?"

'எவ்வளவோ சொன்னேன் அம்மா—அவன் கேட்கவில்லை! முக்கியமான செய்தியாம்–அவசரமாகப் பார்த்தாகவேண்டுமாம்!"

"முடியாது என்று சொல்லிவிடு!"

'சொன்னேன் அம்மா, சொன்னேன்!"

"கேட்காவிட்டால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளு!"

'வீண்விபரீதம் எதற்கு அம்மா?"

"வீண் விபரீதம் அல்ல சிதாரி. இனி நான் சாகசக்காரியைப்போல நடித்துக்கொண்டிருக்கப் போவதில்லை! என் கணவரே கல்லறை சேர்ந்துவிட்டார் இனி நான் எதற்காகப் பயப்படவேண்டும்?"

"அதற்காக இப்படி ஒரு பயனும் இல்லாமல் அவனை விரோதித்துக் கொள்ளவேண்டும் என்கிறீர்களா?"

'பொன்னையாவின் இலட்சியத்தை நான் நிறைவேற்ற தீவிரமாக வேலை செய்யப்போகிறேன்!"

"செய்யுங்கள் அம்மா நான் தடுக்கவில்லை! மற்றுமுள்ளபொன்னையாவின் ஆட்களோடு தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு அதன் பிறகு இவனை விரோதித்துக்கொள்ளலாம்! அதற்கு முன்பு எதற்காக இவனோடு பகை?"

"அதென்னமோ சிதாரி இப்பொழுது நான் யாரையும் பார்க்கக் கூடிய மனநிலையில் இல்லை"

இவ்வாறு செந்தாமரை சொல்லியதைக் கேட்டுக்கொண்டே தூமகேது அங்கு வந்துவிட்டான்.

"ஏன் செந்தாமரை உன் மனநிலை சரியாக இல்லை?" என்று சிரித்துக் கொண்டே கேட்ட தூமகேதுவின் முகத்தை அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

அந்த வஞ்சகனின் முகத்தில்—சோலையப்பனின் வெட்டுண்ட தலையும் அறுந்த தாலியும், இரத்தம் சொட்டும் வாளும் — அவளுக்குத் தெரிந்தன.

அவள் பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டே தலையைக் குனிந்துகொண்டாள்.

அருகிலிருந்த தூணில் அவன் கையை ஊன்றிக்கொண்டு அவளோடு பேச ஆரம்பித்தான்.

"எதற்காக செந்தாமரை, கண் கலங்கியிருக்கிருய்?"

"இப்பொழுது நீங்கள் எதற்காக வந்தீர்கள்–அதைச் சொல்லுங்கள்!"

'உன் திறமையைக் காட்ட நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது என்ற பூரிப்புச் செய்தியைச் சொல்ல ஓடி வந்தேன்! வந்து பார்த்தால் நீ அழுதுகொண்டிருக்கிறாய்!'

'நல்ல சந்தர்ப்பமா—அது என்ன?'

'அலட்சியமாகக் கேட்கிறாயே செந்தாமரை!'

'என் மனநிலை சரியாக இல்லை—நாளைக்குத் தங்களை வந்து நான் பார்க்கிறேன்!'

'இல்லை செந்தாமரை இப்பொழுதே அதை உன்னிடம் நான் சொல்லியாக வேண்டும்!'

'அப்படியானால் சொல்லுங்கள்!'

'இன்று காலை திருமேனி, மதுரைக்கு வந்திருக்கிறாள் தெரியுமா?'

'தெரியும்!'

'எதற்காக வந்திருக்கிறாள் தெரியுமா?'

'தன் காதலனைப் பார்த்துப் பேச வந்திருப்பாள்!'

'நீ சொல்வது உண்மைதான்! அத்துடன் பௌத்தத்திற்குச் செல்வாக்குத் தேடவும் வந்திருக்கிறாள்! காலை அவளுக்கு அளித்த வரவேற்பில், எவ்வளவு பௌத்தர்கள் கலந்துகொண்டார்கள் தெரியுமா? அது சரி, நீ ஏன் செந்தாமரை, வரவில்லை?'

'அதுதான் முதலிலேயே சொல்லிவிட்டேனே—மன நிலை சரியில்லை என்று!'

'என்ன காரணம் — அதை என்னிடம் சொல்லக்கூடாதா?

'அது சொல்லக் கூடியதல்ல — நீங்களே தெரிந்துகொள்வீர்கள்!'

'எப்படி!'

'நாட்களின் ஓட்டத்தில், அதை நிச்சயமாக நீங்கள் புரிந்துகொள்வீர்கள்!...இப்பொழுது அதைப் பற்றி கேட்காதீர்! ஏதோ முக்கியமான செய்தி என்றீர்களே—அதை மட்டும் கூறுங்கள்!' என்று செந்தாமரை கூறியதைக் கேட்டதும், தூமகேதுவின் உள்ளத்தில் கோபம் பீறிட்டது.

இவளால் எவ்வளவோ காரியங்கள் ஆகவேண்டியிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலா, இவளிடத்தில் கோபித்துக்கொள்வது என்று மனத்தைச் சாந்தப்படுத்திக் கொண்டு, நிதானமான முறையில் பேச வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டான்.

'மதுரைக்குத் திருமேனி வந்திருப்பதால், இங்குள்ள பௌத்தர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்!'

'இயற்கைதான்!'

'அரசனே அவளைத் திருப்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு, பௌத்தத்தை ஆதரிப்பவனைப்போல நடந்துகொண்டாலும் கொள்வான்!'

'அதிலொன்றும் ஆச்சரியமில்லை! முன்பு அவர் பௌத்தத்தைத்தானே தழுவியிருந்தார்! சிம்மாசனம் வேண்டும் என்பதற்காகத்தானே—நெற்றியிலே திருநீறுபூசச் சம்மதித்தார்!'

ஆரம்பத்தில் அந்த நோக்கத்தோடுதான் அவன் சைவனானான் என்றபோதிலும் — என் தொடர்பினால் நாளடைவில் உண்மையான சைவனாக மாறிவிட்டான்!'

'அப்படி இருக்கும்போது நீங்கள் எதற்காகப் பயப்படவேண்டும்!'

'பயப்படுகிறேனா? யார்? நானா? இல்லை செந்தாமரை, இல்லை! எதற்கும் நாம் நடவடிக்கைகளை எச்சரிக்கையோடு கவனிப்பது, நல்லதல்லவா?'

'சரி, சொல்லுங்கள்!'

'இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு பொன்னையாவின் ஆட்களும், பௌத்தர்களும், சைவத்திற்கு விரோதமான காரியங்களில் தைரியமாக ஈடுபடுவார்கள்!'

'ஈடுபடட்டும்!'

'என்ன?'

'ஈடுபடட்டும்— அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பது சுலபம் அல்லவா என்று கூறவந்தேன்!'

'அதனால் எந்நேரமும் நீ எச்சரிக்கையோடே இருக்கவேண்டும்! அத்துடன் திருமேனியோடு வந்திருக்கும், இலங்கைப் போர்வீரர்களில் எவனாவது ஒருவனை உனது அடிமையாக்கிக்கொள்! அவன் மூலம் அரண்மனையில் எனக்கும் தெரியாமல் இரகசியமாக என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது சுலபம் அல்லவா?'

'சுலபம்தான்!'

'ஆகையால் நாளைய தினமே உன் அழகு வலையை எவனாவது ஒரு போர் வீரன்மீது வீசவேண்டும்! நீ சுற்றிவிடும் பம்பரமாக அவனை ஆக்கிவிடவேண்டும்! இலங்கைக்கு இங்கிருந்து என்னசெய்தி போகிறது—அங்கிருந்து இங்கு என்ன செய்தி வருகிறது — என்பதை அப்பொழுதைக்கப்பொழுது அவன் மூலம் தெரிந்துகொள்ளவேண்டும்! அதிகமாக உனக்குச் சொல்லவேண்டாம்—அப்படிப்பட்ட சோலையப்பனையே தத்தளிக்கச் செய்துவிட்டவள் அல்லவா நீ?''

அதனால்தான் இப்பொழுது நான் வேதனை அடைகிறேன்!'

'சோலையப்பன் கொல்லப்பட்டதினால், உனக்கு வேதனையா?'

'ஆமாம் ஒற்றர் நாயகமே ஆமாம்!'

'அவன் மீது உண்மையிலேயே நீ காதல் வைத்திருந்தாயா?'

'நான் எங்கே வைத்திருந்தேன்—அவர்தான் தன் உயிரையே என் மீது வைத்திருந்தார்!'

'அது எனக்குத் தெரிந்தது தானே!'

'இப்பொழுது அவர் என்னை விடாமல் துரத்துகிறார்!'

'யார்?'

'சோலையப்பன்தான்! கனவில் பூதமாக வந்து 'உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்!' என்று பயமுறுத்துகிறார்!'

'தூ! இதற்காகத்தான் இப்படி பயந்துபோய் இருக்கிறாயா?'

'ஆகா, எவ்வளவு அலட்சியமாகச் சொல்லிவிட்டீர்? அதுவே உங்கள் கனவில் அவர் பூதமாக வந்து மிரட்டியிருந்தால், தெரிந்திருக்கும்!'

'இதென்ன செந்தாமரை, குழந்தையைப்போல பேசுகிறாய்?'

'ஒற்றர் நாயகமே! இனிமேல் நான் யாரையும் மயக்கவேண்டாம்—பிறகு அவன் பூதமாக வந்து என்னைச் சாகடிக்கிறேன் என்று மிரட்டவும் வேண்டாம்!' என்று சொல்லிவிட்டு, அங்கேயிருந்த ஆசனத்தில் அவள் உட்கார்ந்துவிட்டாள்.

'செந்தாமரை, இதென்ன இப்படித் திடீரென்று கல்லைத் தூக்கி என் தலையில் போட்டுவிட்டாய்! என்று திகைப்போடு தூமகேது கேட்டதும், அவள் ஆத்திரத்தோடு அவனைப் பார்த்து 'உண்மையிலேயே கல்லை உம் தலையில் போடாமல் விடுகிறனே — அதற்காக மகிழ்ச்சியடையுங்கள்!' என்றாள்,

[வளரும்]

### விற்பனையாளர்களுக்கு

"காஞ்சி" விற்பனையாளர்கள் அனைவருக்கும் ஜூலை மாத பில் அனுப்பப்பட்டுள்ளது. எனவே தொகை தவறாமல் அனுப்பவேண்டுவதுடன், பாக்கியுள்ள விற்பனையாளர்கள், தங்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்பக் கோருகிறோம்.

உரிமையாளர்

'காஞ்சி'

# பெரும்பான்மை இல்லை?

—மழலி—

**அன்புள்ள நண்பா!**

கடந்த இரு கிழமைகளாக இந்தியத் துணைக் கண்டத்தை ஜனநாயக சோதனைக் களத்துக்கு இழுத்துச் சென்றுகொண்டிருந்த நிலைமைக்கு ஒருவாருக, தற்காலிகத் தீர்ப்பு வழங்கப்பட்டு, அதன் மூலம் இந்திய ஜனநாயகத்திற்கும் தற்காலிகப் பாதுகாப்பு கிடைக்கச் செய்யப் பெற்றுள்ளதை நீ மறந்திருக்க மாட்டாய் என்று நம்புகிறேன்.

சுமார் 25 ஆண்டுகளுக்குமுன்—ஏறக்குறையவும் இருக்கலாம். காந்தியடிகள் 'ஹரிஜன்' இதழ் நடத்திக் கொண்டிருந்த நாட்கள்.

மத்தியப் பிரதேசத்தின் முதலமைச்சராக இருந்து, பதவியை எதிர்க் கட்சிகளின் கூட்டணிக்குப் பறிகொடுத்த டி. பி. மிஸ்ராவைப் பற்றி காந்தியடிகள் காங்கிரஸ் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் மிஸ்ராவை மிக அணுகி இருந்தவர்களுக்கும் 'ஹரிஜன்' இதழ் மூலம் ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

> "மிஸ்ராவின் நடவடிக்கைகள் எப்போதும் பார்வையில் இருந்துகொண்டிருக்க வேண்டியவை."

என்ற கருத்துப்பட அந்த எச்சரிக்கை அமைந்திருந்ததாம்!

ஆமாம் நண்பா! காங்கிரசின் சுதந்திரப் போராட்டக் காலத்திலேயே, அந்த சுதந்திரப் போராட்டத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்த மிஸ்ராவைப் பற்றி, அப்போராட்டத்தைத் தலைமையேற்று நடாத்திக் கொண்டுவந்தகாந்தியடிகள்காட்டியசிகப்புவிளக்குஅது.

செவ்வொளி கண்டு சிந்தை நொந்து போவர் வேறு யாராகவாவது இருந்தால்!

அவர் மிஸ்ரா அல்லவா! படலுக்கு அப்புறம், இரும்பு இதயம் படைத்தவர் என்ற பெருமதிப்புக்கு உரியராக விளங்கியவர் ஆயிற்றே! சித்தம் கலங்கவில்லை! சினம் கொள்ளவில்லை! சிரித்துக்கொண்டிருந்திருக்கவேண்டும்! ஏன் தெரியுமா? எதிர்காலத்தில் மத்தியப் பிரதேசத்தில் தான் ஒரு கதாநாயகனுக விளங்கப் போகிருேம்—நாள் தவருமல்—ஏடு, இதழ்கள் தவருமல்—தன்னைப்பற்றிய செய்திகள் இடம் நிரப்பப் படப்போகிறது—என்ற கனவு அப்போதே அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

இல்லையென்ருல், காந்தியடிகளே, நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டியவர் என்று ஏடு மூலம் எடுத்துக் காட்டிவிட்ட பின்னரும், காங்கிரசிலிருந்துகொண்டிருக்க—அவர் பித்துப் பிடித்தவரா என்ன?

தொடர்ந்து, தொய்ந்து, துவண்டு கொடுத்து காலத்தை வென்று வந்த பிறகல்லவா மத்தியப் பிரதேசத்தின் கதாநாயகன் பீடத்தைப் பிடித்தார்!

நண்பா! நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டியவர்—என்ற காந்தியடிகளின் சொல்லாட்சியிலிருந்து என்னவெல்லாம் பெற முடியும் என்று நினைக்கிருய்?

ஒரு போலீஸ் நிலையத்துலிருந்து மற்ருெரு நிலையத்துக்கு அறிக்கை போகும். அந்த அறிக்கையின் அடக்கம் அனைத்துக் காவலர்களுக்கும் அறிவிக்கப்படும்.

தலைமைப் போலீசு நிலையத்துக்கும், தலைமை அதிகாரிக்கும்கூட அறிவிக்கப்படும், "அந்த ஆசாமியின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும்" என்பதாக!

கொலைப்பழி ஏற்பட்டிருக்கக்கூடும்—கண்காணிக்க வேண்டிய அளவுக்கு நிலைமை வந்திருக்கலாம்.

நாட்டுக்கு எதிரான சதிச்செயலில் ஈடுபட்டிருக்கக்கூடும்—

கள்ளவாணிகம், கொள்ளைக்குழு, முதலான ஐயப்பாட்டுக்குரியவனுகத் தோன்றி இருக்கலாம்.

சமூக விரோதச் செயல்களைத் தூண்டிவிடக்கூடியவனுகக்கூட இருக்கக்கூடும்—கண்காணிக்க வேண்டிய நிலைமை ஏற்படலாம்;

இவையும், இவை போன்ற குற்றங்களுமே போதிய ஆதாரங்கள் அற்ற நிலையில் — ஆனுல் ஐயப்பாடு மட்டும் ஏற்படுகிற தன்மையில் ஒருவனைக் கண்காணிக்க வேண்டிய நிலைமையை உண்டாக்கக் கூடியவை.

இந்தக் கொடுஞ்செயல்களோடு, காந்தியடிகளின் எச்சரிக்கையையும் நினைத்துக்கொள் — மிஸ்ராவையும் முன்நிறுத்து!

ஆனுல் தடயம் கிட்டவில்லையல்லவா — தேடிக் கொண்டல்லவா இருக்கிருர்கள் — கண்காணிக்கப்பட வேண்டியவர் என்பதனை மட்டும் எடுத்துக்கொள். ஒரு முடிவுக்குவா! ஆனுல் வெளியிடாதே!!

அத்தகைய நிலையில் நிறுத்தப்பட்டிருந்த மிஸ்ராதான் நண்பா கடந்த கிழமை தன் பதவியைப் பறிகொடுத்தார்!

எதிர்க்கட்சிகளிலுள்ளவர்களையும், காங்கிரசுக்கு எதிராக இருந்து செயல்பட்டவர்களையும்கூட, விலைகொடுத்தும், பதவி தந்தும் ஆசை காட்டியும் அணைப்பு நல்கியும் "காங்கிரசுக்கு உள்ளே இழுக்கும்" ஜனநாயகப் படுகொலையை முதன் முதலில் இந்தியத் துணைக்கண்டத்திலேயே காங்கிரஸ்தான் செய்தது.

காங்கிரஸ் காட்டிக்கொடுத்த வழியில் தடம் புராளாது இன்றைய இந்தியா நடைபோடுகிறது! அதன் பலன்தான் நண்பா! மத்தியப் பிரதேசத்தில் எதிர்க்கட்சிகள் மந்திரிசபை கடந்தகிழமை அமைந்தது!

ம. பி.யையும் சேர்த்து இப்போது இந்தியாவில் எதிர்க்கட்சி ஆட்சி 9 மாநிலங்களில் செயலில் இருக்கிறது.

நண்பா! தமிழ்நாடு கேரளா, மேற்குவங்கம், ஒரிசா பீகார் உத்திரப்பிரதேசம், பஞ்சாப், அரியானா, கடைசியாக மத்தியபிரதேசம் ஆக ஒன்பதுதான் அவை.

1967 எண்ணிக்கைப்படி இப்போதைய 16 மாநிலங்களில் மேற்கண்டவைகளில் இருக்கும் எதிர்க்கட்சியின் ஆட்சி நீங்கலாக பிற மாநிலங்களில் காங்கிரஸ் அரசோச்சுகிறது.

நண்பா! இந்தியத் துணைக்கண்டத்தின் மொத்தப் பரப்பளவில் 14, 45, 662, சதுர கிலோ மீட்டர்கள் இப்போது எதிர்க்கட்சிகளின் பிடியில் இருக்கின்றன; அதாவது சற்றுக் கூடுதலாக 50 சதவீதத்துக்கும் மேலாக. ஆனால் நண்பா, மக்கள் தொகைக் கணக்குப் படிப்பார்த்தால் மொத்த மக்கள் தொகையில் சுமார் 64 சதவீதம்! அதாவது 25.5 கோடி!!

காங்கிரசின் கட்டுக்குள் 14.5 கோடி அதாவது 66 சதவீதம்!

நண்பா! ஒன்பது மாநிலங்களில் எதிர்க்கட்சிகளின் ஆட்சி என்பது மட்டுமே—நிறைவு ஏற்பட்டுவிடப் போதுமானதல்ல! அந்த ஒன்பதும் எப்படிப்பட்ட மாநிலங்கள் தெரியுமா? காங்கிரசின் கடந்த கால வரலாற்றுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாயிருக்கின்றன தெரியுமா?

தமிழ் நாட்டை எடுத்துக்கொள்! நண்பா, இந்தியாவின் மூளையே தமிழ் நாடுதான் என்பார்கள். காந்தியடிகளும், நேரு பெருமகனாரும் கூட அன்றைக்கு ஒப்புக்கொண்டிருந்த உண்மை இது! காங்கிரசின் பிடியில் அந்த 'மூளை' இன்றைக்கு இல்லை!

கேரளாவைப்பார்! படித்தவர்கள் மிகுதி என்பார்கள்! இந்தியில் எவ்வளவு பட்டங்கள் இருந்தாலும் சாதாரணமான ஒருவன் நாலு இங்கிலீஷ் வார்த்தைகள் எழுதப்படிக்கத் தெரிந்தவனைத்தான் படித்தவன் என்று கூறுவான்! அந்த பாமரனின் கணிப்புப்படி நாலும் படித்தவர் உள்ள பகுதி; அதுமட்டுமல்ல—இந்தியாவுக்கு அதிகமான வெளி நாணயத்தைத் தேடித்தரும் ஒரு மாநிலம்—எப்போதும் ஒரு பிரச்னைக்குரியதாகவே இருந்து கொண்டிருக்கும் பகுதி—தலைவலிப்பிரதேசம்!!

அது இன்று காங்கிரசில் இல்லை'!

மேற்கு வங்காளத்திற்குக் காங்கிரஸ் வரலாற்றில் எப்போதும் ஒரு தனி இடம் உண்டு, இப்போதைய அளவுப் படி 87 873 சதுர கிலோ மீட்டர் கொண்ட மாநிலம் அது, வங்காளச் சிங்கமாய்த் திகழ்ந்த பகவத் சிங், ரஞ்சித்சிங் போன்ற புரட்சி வீரர்களைக் கண்ட பகுதி. பல புரட்சிப் போராட்டங்களைச் சந்தித்த மக்களைக் கொண்ட மாநிலம்! சுதந்திரப் போருக்கு 'வீரம்' ஊட்டிக் கொண்டிருந்த பகுதி.

அந்த 'வீரம்' இப்போது காங்கிரசில் இல்லை.

உத்திரப்பிரதேசம்—நேரு பெருமகனாரின் சொந்த மாநிலம்! மோதிலால் நேருவை வழக்குரைஞராக்கி காங்கிரஸ் எதிரியை வழக்கு மன்றத்திலே நிறுத்தி 'நீதி' கேட்ட பகுதி அது.

அந்த 'நீதி' இன்றில்லை காங்கிரசில்!!

இதேபோல் நண்பா! பிற ஒரிசா. பீகார், பஞ்சாப், அரியானா (ஒன்றாக இருந்தபோது) முதலான ஒவ்வொரு பெரிய பெரிய மாநிலங்களும் ஒவ்வொரு சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன.

அந்தச் சிறப்புகள் காங்கிரசில் இன்றில்லை. மொத்தத்தில் நண்பா, இன்றைக்குக் காங்கிரசில் 'மூளை' இல்லை; 'நீதி' இல்லை; 'வீரம்' இல்லை; 'தலைவலி'யும் இல்லை! சிறப்புக்களும் இல்லை!!

மதுபானப் பகுதிகள் பெரும்பான்மையும் இருக்கின்றன!

காங்கிரஸ் வரலாற்றில் சிறப்பிடங்களாகத் திகழ்ந்த இந்தப் பகுதிகளிலெல்லாம் இன்றைக்குக் காங்கிரஸ் படுதோல்வி கண்டுவிட்டிருக்கிறது என்பதனை—சாதாரண விமர்சனச் செய்தியாக மட்டும் எடுத்துக்கொள்ளக் கூடாது நண்பா! அங்கெல்லாம் ஒருபடி அரிசி போடுவதாக யாரும் வாக்குறுதி தராமலேயே காங்கிரஸ் ஆட்சி அகற்றப்பட்டிருக்கிறது!

பெரும் பான்மையான மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி இன்றில்லை. சிறுபான்மையாகிச் சிறுத்துவிட்டது.

ஆனால் நண்பா, இந்த எல்லா மாநிலங்களின் மொத்த வரி வருவாய்ரூ. 2000 கோடிக்கும் மேல்மட்டும் மத்திய அரசு பறித்துக் கொள்கிறது!

> இந்தக் கொள்ளைப் பணத்திலிருந்துதான் மாநிலங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்குத் தொகையை, ஒழுங்காகக் கொடுக்கும் படி இன்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கேட்கிறார்கள்!

எதிர்க் கட்சிகளின் பிடியிலிருக்கும் மாநிலங்களிலிருந்து பிடுங்கிச் செல்லும் தொகையில்தான் உரிய பங்கு கேட்கிறோம் நாம்! நம்மைப்போலவே பிற மாநிலங்களும் கேட்கின்றன!!

மொத்தத்தில் காங்கிரசின் பிடிப்பிலிருந்து வெளி வந்துவிட்ட மாநிலங்கள் அனைத்தும் இன்றைக்கு மத்திய அரசின் ஏகாதிபத்தியப் போக்கினையும், ஆதிபத்திய மனப்பான்மையையும் எதிர்த்துப் போராடக் கிளம்பிவிட்டன நண்பா!

இந்த நிலைமைகள்யாவும், தான் விதைத்த விதைக்குச் செய்யும் நல்ல அறுவடைகள்தான் என்பதனை இதயம் படைத்த எந்தக் காங்கிரசுக்காரரும் மறுக்கத் தயாராக இருக்கமாட்டார்!

கண்காணிக்கப்பட வேண்டியவர்' என்று கருதப்பட்ட மிஸ்ரா இன்றைக்குக் காங்கிரசிலிருந்து தன் பொறுப்புக்களை விட்டுவிட்டதாகச் செய்தி வருகிறது. அவரது அமைச்சரவை கவிழுமுன்னதாக, அவரே பதவி விலகியிருந்தால், இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்கிறார் இப்போதைய ம. பி. முதலமைச்சர்.

பொதுத்தேர்தல் நடைபெற்று முடிந்த இந்த 5 மாத காலத்தில், காங்கிரசாக இருந்து எதிர்க்கட்சிகளின் கைக்கு வந்த மூன்றாவது மாநிலம் மத்தியப் பிரதேசம்,

ஏற்கெனவே அரியானாவும், உ. பி.யும் அந்த கதிக்கு ஆளாகிவிட்டுள்ளன.

நாளைய நிலைமையைத் துல்லியமாக மதிப்பிடுவதற்கில்லை. எதையும் குறைத்துக் குறைத்து மதிப்பிடும்—ஆனால் மதிப்பீட்டைத் திட்டவட்டமாகக் குறிப்பிடும் அறிஞர் அண்ணா அவர்களே மத்திய அரசுகூட நிலைத்து நிற்க முடியாது என்று கூறி இருக்கிறார்கள்.

அந்த மதிப்பீட்டை மெய்ப்பிக்கும் சான்றுகளாகத்தான் அரசியல் நிகழ்வுகள் நிகழத் தொடங்கி இருக்கின்றன, காங்கிரசின் பொறுப்பானவர்களது பேச்சுக்களும் அதனைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

எனவே நண்பா, மக்கள் தொகையிலும் பரப்பளவிலும் இன்றைக்குத் தனி பெரும்பான்மையை இழந்து நிற்கும் டில்லி, நாளைக்குத் தன் பாராளுமன்றத்திலும் "பெரும்பான்மை இல்லை" என்று அறிவிக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போம்!

விதைத்துவிட்ட விதை அப்படி; அறுவடை செய்யவேண்டியவர்களும் அவர்கள்தானே!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்.



இப்பொழுது நடைபெறுகிறது!
பாலன் பிக்சர்ஸ் அளிக்கும் ஸ்ரீ ஸ்ரீ பிலிம்ஸ்
காதல் பறவை
சென்னை
பிளாஸா
மேகலா
மஹாராணி
நூர்ஜஹான்
மற்றும் தென்னாடெங்கும்
டைரக்ஷன்
A.V.S.ராவ்
தயாரிப்பு
ஆனந்தராவ்
கதை திரைக்கதை-வசனம் பாடல்கள் இசை காமிரா கலை எடிட்டிங் ஸ்டில்ஸ்
ராஜஸ்ரீ, A.L.நாராயணன், கண்ணதாசன், வேதா, G.K.ராமு, M.வரதன், R.தேவராஜன், சிம்மையா ஆனந்த்
NEGATIVE RIGHTS CONTROLLED BY
BALAN COMBINES-MADRAS-31
SATHYAM




ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம்
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.